## தொழில்நிலை

1982 இல் அரச திணைக்களங்கள், அரசுசார் நிறுவனங்கள் (அரச கூட்டுத் தாபனங்களும் நியதிச் சட்ட சபைகளும்) நன்கமைந்த தனியார்துறை (ஊழியர் சேம நிதியத்திற்கு உதவுதொகை வழங்கும் தனியார் முயற்சிகள்) ஆகியவற்றில் தொழில்நிலை 34,000 அல்லது 2.1 சதவீதத்தால் அதிகரித்தது. தொழில் நிலையிலுள்ள இவ்வதிகரிப்பு மரபுவழி வேளாண்மை, அகழ்தலும் பார்குழி, சுய தொழில், கட்டடவாக்கம் போன்றவற்றை உள்ளடக்கவில்லை.

மத்தியவங்கியினால் நடத்தப்பட்ட தொழில்நிலை ஆண்டு அளவீடு அரசதுறையில் தொழில்நிலை 1981 இன் 5389 அல்லது 1.1 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 4337 அல்லது 1 சதவீதத்தால் உயர்ந்துள்ளதென்பதைக் காட்டியது. அரசுசார் துறைகளில் புதிய வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம் 1981 இன் 9077 உடன் ஒப்பிடுகையில் 4035 ஆக விளங்கியது. இது 1981 இன் 1.2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 0.52 சதவீதம் மட்டுமேயாகும்.

நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை 1981 இன் 26156 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 25625 ஆல் அதிகரித்தது. (தற்காலிக ஊழியர் சேமநிதிய தரவு) கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ்வரும் நிறுவனங்கள் 1982 இல் தொழில்நிலையை 5005 ஆல் அதிகரித்து கொ. பெ. பொ. ஆ. குழு நிறுவனங்களில் தற்பொழுது தொழிலிலமர்த்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையை 24926 ஆட்களுக்கு கொண்டுவந்தது. அரசு, அரசுசார் தொழில் நிலையுடன் ஒப்பிடும்போது நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை மட்டம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. அரச செலவினங்கள் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டிற்குள் உட்பட்டதாக கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அரசுசார்துறைகளின் கொடுகடன் விரிவாக்கத்தின்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆகியன இத்துறையில் தொழில்நிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் காரணிகளில் சிலவாக இருக்கலாம்.

கிடைக்கத்தக்க தரவுகளின்படி 1978 இலிருந்து 1982வரையிலான கடந்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் நன்கமையாத தனியார்துறை தவிர்ந்த மற்றையவற்றில் உருவாக்கப்பட்ட புதிய தொழில்களின் மொத்த எண்ணிக்கை 352,654 ஆக விளங்கியது.

## விலைகள்

1982இல் விலை நடத்தையின் ஓர் பண்பு விலைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிப் போக்காகும். குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், மத்திய வங்கியினால் கணிக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ஆகிய இரண்டும் முன்னைய ஆண்டிலும் பார்க்க 1981இல் விலை அதிகரிப்புக்கள் குறிப்பீடத்தக்களவு குறைவானதைக் சுட்டிக்காட்டின. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முன்னைய ஆண்டின் 18 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 10.8 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. உண்மையில் நுகர்வோர் விலைகள் 1982 திசெம்பரின் சுட்டெண்